DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

STC.NO.183/2023

**Depositions of DW 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **சரவணன்** | **Caste** | |
| **Father's Name** | **ராஜவேல்** | **Calling** | |
| **Village** | **திருவில்லிபுத்தூர்** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th Day of July 2026.

**15.07.2026**

புகார்தாரர் ஆஜர் இல்லை. புகார்தாரர் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 256 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் ராஜபாளையம் மகாலட்சுமி நகரில் குடியிருந்து வருகிறேன். இ-சேவை மையம் வைத்து நடத்தி வருகிறேன். சி.ஏ படித்துள்ளேன், ஆனால் முழுமையாக முடிக்கவில்லை. எதிரியை தெரியும். எதிரியும், நானும் சிறு வயதிலிருந்தே ஒரே தெருவில் வசித்து வந்ததால் எனக்கு எதிரியை நன்றாக தெரியும். சிவகாசி அக்ஷயா பைனான்ஸ் நிறுவனத்தில் 2020 அக்டோபர் மாதத்தில் பணிக்கு சேர்ந்தேன். நான் அக்ஷயா பைனான்ஸில் அலுவலக உதவியாளராக வேலை பார்த்தேன்.

பழனிக்குமார் என்பவர் அக்ஷயா பைனான்ஸ் நிறுவனத்தினை நடத்தி வந்தார். 2020 நவம்பர் – டிசம்பர் மாத வாக்கில் எதிரி என்னை அணுகி ரூ.2 லட்சம் தொகையினை ஏற்பாடு செய்து தர முடியுமா என்று கேட்டார். நான் முயற்சி செய்கிறேன் என்று கூறினேன்.

2) பின்னர் எதிரியிடம் நான் வேலை பார்க்கும் அக்ஷயா பைனான்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பழனிக்குமாரிடம் எதிரி கேட்ட தொகையை கேட்டுப் பார்க்கலாம் என்று கூறினேன். எதிரி என்னிடம் பணம் கேட்ட விவரத்தை பைனான்ஸ் அலுவலகத்தில் வைத்து பழனிகுமாரிடம் கூறி பணம் ஏற்பாடு செய்து தரமுடியுமா என்று கேட்டேன். அதற்கு பழனிகுமார் என்னிடம் எதிரி என்ன வேலை பார்த்து வருகிறார், பணம் கொடுத்தால் அதற்கு ஆதரவாக என்ன ஆவணங்களை தருவார் என்று கூறினார். இதுபற்றி எதிரியிடம் தெரிவித்து எதிரியின் முகவரிக்கான அடையாளம் மற்றும் 15 காசோலைகளை பெற்றேன். எதிரி கொடுத்த காசோலைகள் மற்றும் ஆதார் அடையாள அட்டை நகல் ஆகியவற்றை 2021 பிப்ரவரி கடைசியில் பழனிகுமாரின் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன்.

3) அப்போது பழனிக்குமார் என்னிடம் எதிரி வாங்கப் போகும் தொகைக்கு ஜாமீன்தார் கொடுக்க முடியுமா என்று கேட்டார். அது பற்றி எதிரியிடம் தெரிவித்தபோது தொகை குறைவாக உள்ளதால் ஜாமீன்தார் இல்லாமலேயே பணத்தை வாங்கி கொடுங்கள் என்று என்னிடம் கூறினார். அதன்பின்னர் பழனிகுமார் என்னிடம் தெரிவித்தவாறு எதிரிக்கு எந்தவிதமான தொகையினையும் ஏற்பாடு செய்து

கொடுக்கவில்லை. அதன் பின்னர் பைனான்ஸ் நடத்தி வந்த பழனிக்குமாருக்கும், எனக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டதால் நான் பைனான்ஸ் நிறுவன வேலையிலிருந்து 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நின்றுவிட்டேன். அதன் பின்னர் சுமார் 1 ½ ஆண்டுகள் சென்று எதிரி என்னிடம் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று பழனிகுமாரிடமிருந்து வந்துள்ளதாக கூறினார். அதற்கு எதிரியிடம் இது பற்றி பழனிக்குமாரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லி, பழனிக்குமாரை போனில் அழைத்து எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து கேட்டபோது பழனிக்குமார் என்னிடம் தேவையில்லாத விஷயங்களை கூறி போனை துண்டித்துவிட்டார். அதன் பின்னர் இந்த வழக்கு சம்பந்தமாக எதிரி சமீபத்தில் தான் என்னிடம் தெரிவித்தார். அதன் மூலம் தான் பழனிக்குமார் எதிரி மீது வழக்கினை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியவந்தது.

**(கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**